செ.வெ.எண்.34 நாள்:15.05.2017

**திருநெல்வேலி மாவட்டத்தில் அரசு பேருந்துகள் இயக்கும் பணிகளை மாவட்ட ஆட்சித்தலைவர் முனைவர் மு.கருணாகரன்,இ.ஆ.ப., அவர்கள் நாடாளுமன்ற உறுப்பினர் திரு.கே.ஆர்.பி.பிரபாகரன் அவர்கள் நேரில் சென்று ஆய்வு.**

----

திருநெல்வேலி வண்ணார்பேட்டையில் உள்ள அரசு விரைவு போக்குவரத்துக்கழக பணிமனை மற்றும் புறநகர் (பைபாஸ்) பணிமனை தாமிரபரணி பணிமனை ஆகியவற்றில் இன்று (15.05.2017) நேரில் சென்று மாவட்ட ஆட்சித்தலைவர் முனைவர் மு.கருணாகரன்,இ.ஆ.ப., அவர்கள் ஆய்வு செய்தார்கள். நாடாளுமன்ற உறுப்பினர் திரு.கே.ஆர்.பி.பிரபாகரன் அண்ணா தொழிற்சங்க செயலாளர் திரு.கே.பி.கந்தசாமி பாண்டியன், நெல்லை பரமசிவம், பொது மேலாளர் திரு.செல்வ கோமதி குமார், உதவி மேலாளர் (வணிகம்) திரு.சுப்பிரமணி, கிளை மேலாளர் திரு.சங்கரநாராயணன் உடனிருந்தர்.

பின்னர் மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்கள் செய்தியாளர்களிடம் தெரிவித்ததாவது:-

தமிழ்நாடு அரசு போக்குவரத்து கழகத்தின் சில தொழிற்சங்கங்கள் சார்பில் வேலை நிறுத்தம் அறிவுத்துள்ளதை அடுத்து திருநெல்வேலி மாவட்டத்தில் பொதுமக்கள் இயல்பு வாழ்க்கை பாதிக்காதவாறு பேருந்துகள் இயக்கப்பட்டு வருகிறது. இன்று காலை 40 சதவிகிதத்தில் இயக்கப்பட்ட பேருந்து தற்பொழுது 62 சதவிகிதமாக அதிகரிக்கப்பட்டுள்ளது. மாலை நேரத்தில் இவற்றை விட கூடுதலாக அரசு பேருந்துகளை இயக்கப்படவுள்ளது. மேலும் நாளை (16.05.2017) அனைத்து பேருந்துகளையும் முழுமையாக இயக்க நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

அரசு பேருந்துகள் தவிர தனியார் பேருந்துகளும் முழுமையாக இயக்கப்பட்டு வருகிறது. தனியார் பள்ளிகள், தனியார் கல்லூரிகளில் பணிபுரிந்து வரும் ஓட்டுநர்களும், வேலைவாய்ப்பு அலுவலகத்தில் பதிவு செய்யப்பட்ட ஓட்டுநர்கள் மற்றும் நடத்துனர்கள் விபரங்கள் சேகரிக்கப்பட்டு அவர்கள் மூலமாகவும் பேருந்துகள் இயக்க நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது. மேலும் நேரு யுவகேந்திரா, செஞ்சிலுவை சங்கம், உட்பட பல்வேறு அமைப்புகளிடம் இருந்தும் ஓட்டுநர்கள் மற்றும் நடத்துநர்கள் பயன்படுத்தப்பட உள்ளனர். அனுபவம் உள்ள ஓட்டுநர்கள் தேர்வு செய்யப்படுகின்றனர். போதிய காவலர்கள் பாதுகாப்பு பணியில் ஈடுபடுத்தப்பட்டுள்ளனர்.

தனியார் பேருந்துகளில் கூடுதல் கட்டணம் வசூலித்தால் அவர்கள் மீது கடும் நடவடிக்கை எடுக்கப்படும் என தெரிவித்தார்.

முன்னதாக இன்று காலை 6.30 மணிக்கு மாவட்ட ஆட்சித்தலைவர் முனைவர் மு.கருணாகரன்,இ.ஆ.ப., அவர்கள் வண்ணார்பேட்டையில் உள்ள அரசு விரைவு போக்குவரத்துக்கழக பணிமனை மற்றும் புறநகர் (பைபாஸ்) பணிமனை தாமிரபரணி பணிமனை மற்றும் திருநெல்வேலி புதிய பேருந்து நிலையத்திற்கு நேரில் சென்று அரசு பேருந்துகள் இயக்கும் பணிகளை பார்வையிட்டு ஆய்வு செய்தார்கள். மாநகர காவல் துணை ஆணையர் (சட்ட ஒழுங்கு) திரு.பிரதீப் குமார், இ.கா.ப., அவர்கள் உடனிருந்தர்.

வெளியிடு: செய்தி மக்கள் தொடர்பு அலுலகம் திருநெல்வேலி.